**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 182/2019 |
| Name | : Ramkumar |
| P.W. | : 1 |
| Father Name | : Nagaraj |
| Village | : Madathukulam |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : Electical shop |
| Religion | : |
| Age | : 37/2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.02.2022

1ம் எதிரி ஆஜரின்மையால் அவரின் அடையாளம் பற்றி ஆட்சேபணை இல்லை என்று எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நான் மடத்துக்குளத்தில் வசித்து எல்க்ட்ரிக்கல் வேலை செய்து வருகிறேன். கடந்த 13.04.2016 அன்று நான் மடத்துக்குளத்தில் வீடு கட்டிக் கொண்டு இருந்தேன். அப்போது கான்கிரீட் போட்டுக்கொண்டிருந்த போது பகல் 11.00 மணி இருக்கும். திடீரென்று 4 பேர்கள் கட்டிடத்தின் மேல்புறம் வந்து என்னை அடித்து கீழே தள்ளி என்னை உதைத்து 2 பேர் கையை பிடித்துக்கொண்டார்கள் காலை பிடித்துக்கொண்டார்கள் சத்தம் கேட்டு எனது பெற்றோர் வந்த போது அவர்களையும் அடித்தார்கள். என்னை மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார்கள். என்னை அடித்தது ஆஜர் 3

எதிரிகள் தான். 1ம் எதிரி நீதிமன்றத்தில் இல்லை. என்னை தாயோழி நான் கட்ட வேண்டாம் என்று சொன்னேன் ஏன் கட்டுகிறாய் என்று 4 எதிரிகளும் கேட்டார். சதாசிவம் நான் செல்போனில் போட்டோ எடுத்த போது எனதுபோனை தட்டிவிட்டு என்னை பேஸ்மட்ட குழிக்குள் தள்ளிவிட்டார். என்னை அடித்து தள்ளிவிட்டார். கிருஷ்ணமூர்த்தி என்னை தடியால் என்னை முதுகில், தலையில் அடித்தார். சிவராஜ் செங்கல்லை எடுத்து என் மீது வீசினார். என் உடம்பில் பட்டது. 2, 3 கற்கள் எறிந்தார். மதிவாணன் எனது கையை, காலை பிடித்துக்கொண்டார். இனிமேல் கட்டிட வேலை செய்தால் கொலை செய்து விடுவோம் என்று 4 பேரும் என்னை மிரட்டினார்கள். நான் மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் சென்று அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று பின்னர் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். எனது பெற்றோர் உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார்கள். எனது பெற்றோருக்கு தோள் பட்டையில், மண்டையில் காயம் ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அது மருத்துவமனையில் போலீசாரிடம் கொடுத்தேன். அது அ.சா.ஆ. 1 ஆகும்.

போதிய வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை